# விடம்




ஜீலை - செப்டெம்பர்
2006

விலை: ரூ. 20

கவிதைகளுக்கான காலாண்டிதழ்

COMNET TECHNOLOGIES

# பறை சொல்லும் சேதி



துயின்ற வைகறை
திடுக்கிடுகிறது.
தேயிலைகள்
நடு நடுங்குகின்றன.
புத்தம் புதிதாய் சிரிக்கிறது
கடைசிப் பனித்துளி
ஆமாம் அங்கு!
பிரட்டுப் பறையின்
ஒலியதிர்வு எழுந்திருக்கிறது.

விடியலின்
புறப்பாட்டுக்கு முன்னதாக
விரிந்திருக்கும் காலத்துளிகளின்
மீதிருந்தபடி
துயரமும், ரணமும், மரணமும் வாழ்வும்
ஒன்றென வாழ்ந்திடும்
மனிதர்தம் ஜீவ ஒலிகளாய்
கூவுகிறது இந்தப்பறை

ஆங்கிலத்தில் சி.வி.வேலுப்பிள்ளை
தமிழில் வே.தினகரன்

"எழுத்து ஆன்மாவின் ரத்தம்
கவிதைகள் காலத்தின் உதடுகள்"


வடம்
கவிதைகளுக்கான இதழ்

மலர்: 1
இதழ்: 4

ஜூலை - செம்டெம்பர்
2006

**ஆசிரியர் குழு**

பா. மகேந்திரன்
இரா. நெல்சன்
வே. தினகரன்

**ஓவியங்கள்**
அனுர

**அச்சிட்டு வெளியிடுவோர்**
**"குயில்தோப்பு"**
**கலை இலக்கிய ஒன்றியம்**
**காவத்தை.**



தொடர்பு முகவரி:
**VADAM**
No: 04,
Main Street, Kahawatta - 70150

தொலைபேசி
0773-452246
0773-462204
060-2519330

*Kuyilthoappu@yahoo.com*



**கவிஞன் பதில்கள்**

**கவிதைகள்**

சி. சிவசேகரம்

வே.தினகரன்

க. விநாயகமூர்த்தி

வீ.பா.கணேசன்

செம்மலர் மோகன்

பாஸ்கி

மைபா

சங்கமித்தா

புனிதகலா

மைலாடியூ கிட்டு

சை. கிங்ஸ்லி கோமஸ்

எஸ்தர் லோகநாதன்

ஆர்.கே. புஸ்பா தேவி

கடிகாரன்

ஆதிபகவன்

க. கனேஷமூர்த்தி

மொழிவரதன்

சடாயு

**நேர்காணல்**

சு.முரளிதரன்

**வாசகர் கடிதங்கள்**

# உழைக்கும் மக்களும் ஊடகங்களும்

மனித அறிவின் விரிகை சௌகர்யங்களை இலகுப்படுத்தி மனிதர்களின் உள்ளங்கைகளில் கொடுத்திருக்கிறது. இந்த சௌகரியங்கள் சுரண்டுகைகளின் சொர்க்கங்களாக விளங்கும் அதே வேளை அவற்றின் துல்லிய தன்மையின் வெற்றியை நாம் மகிழ வேண்டியுமிருக்கின்றோம். அவ்வகையில் மொழித்தோன்றாக் காலத்திலிருந்து இன்றுவரையிலான மனிதர்களுக்கிடையிலான தொடர்புவிருத்திப் பரிணாமம் வியக்கவைக்கிறது.

நேரடித் தொடர்புகளுக்காக மனிதர்கள் கஸ்டங்களை அனுபவித்த காலங்களில் அதற்கான தவிப்பிருந்தது. உழைப்பிருந்து, ஏக்கமிருந்தது, நெருக்கமிருந்தது, செய்திகளிருந்தன. தொடர்பூடக அபிவிருத்தி பெற்ற இன்று சௌகரியமும் செய்தியும் தவிர மற்றைய அனைத்தும் வீசியெறியப்பட்டுவிட்டன. இது மனிதர்களுக்கிடையிலான கூட்டுறவைச் சிதைத்து, உணர்வுகளை, உறவுகளை நசுக்கி பொருள் முதல்படுத்தப்படும் கோலம். உலகமயமாக்கம் மனிதர்களுக்கும் உறவுகளுக்கும் பொறிகள் பொருத்திவிட்டது. கடிகாரம் குறித்த கதியில் ஓட, மனிதன் மிகத்துரித கதியில் ஓடுகிறான். வாழ்க்கையிலிருந்து உணர்வுகளும், மனிதமும் நீங்கியோடுகின்றன. இவற்றைப்பார்த்து நாம் அருவருப்பும், வெறுப்பும் அடைந்தாலும் அவற்றோடொட்டியேச் செல்லென வாழ்க்கை நம்மையும் வழிப்படுத்துகிறது. எனவே இதிலிருந்து நாமும் விலகியோட முடியாத நிலையில் இருக்கிறோம்.

நவீன விஞ்ஞான யுகத்தில் தொடர்பூடகங்கள் அறிவு சார்ந்த வழிகளில் வளர்ச்சியை கண்டுள்ளன. மறுபுறத்தில் உணர்வுகளின் தளத்தை மெதுமெதுவாக சிதைத்து வந்துள்ளன. உறவுக்கடிதம் ஒன்றில் இருந்த விளிப்பின் ஈர்ப்பு இன்று 'ஹலோ' எனும் ஒற்றைச் சொல்லுக்குள் அடங்கிவிட்டது.

இது இவ்வாறிருக்க நவீன தொடர்பூடக சாதனங்கள் இன்று ஒவ்வொரு தனிமனிதனையும் ஆட்கொண்டுள்ளன. ஒருவரிடம் பேச்சு கொடுத்து நாம் அவரின் அறிவினை எடைபோடுகிறோம். அதேவேளை ஒரு தொடர்பூடகம் ஒருவனை எந்தளவு பாதித்துள்ளது என்பதை காணத்தவறிவிடுகிறோம். அந்தவகையில் இந்த ஊடகங்களுக்கு இருக்கும் கடமைப்பாங்கு அளப்பரியது. இக்கடமையை உணர்ந்து உண்மைகளை மக்களிடம் எடுத்துச் செல்லமுனைவோருக்கு இருக்கும் சவால்களும், அச்சுறுத்தல்களும் மிக அதிகமானவை. அவற்றை கடந்து தமது கடமைகளை நேர்மையாகச் செய்தவர்களை மரணத்தின் மன்றத்திலேயே 'ஜனநாயகம்' கௌரவித்துள்ளது.

உழைக்கும் மக்களிடையே வர்க்க உணர்வையூட்டுவதற்கும், சிந்திக்கத் தூண்டுவதற்கும் தீர்மானங்களை சுயமாக எடுக்கவிடுவதற்கும் வெகு ஜனங்களுக்கான ஊடகங்கள் கடுமையாக உழகைக்க வேண்டியிருக்கிறது. அதிக தியாகங்களை செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் தான் எதிரே விஸ்வருமமெடுக்கும் ஏகாதிபத்திய பல்தேசிய கம்பனிகளின் சக்தி மிக்க செய்திச் சாதனங்களை நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆடம்பரமான கவர்ச்சிகளோடு எதிர் நிற்கும் இவ் நச்சு ஊடகங்களை தாண்டி உழைக்கும் மக்களை தெளிவுபடுத்த வெகுஜனங்களுக்காக உழைப்போர், மக்களிடையே எளிமையாகவும், இலகுவாகவும் சேதி சொல்லும் சரியான ஊடகங்களை கண்டறிய வேண்டும்.

உலகத்தின் உருமாற்றம் பற்றிய மாக்ஸிய தத்துவமானது 'மக்களின் உணர்வுத்தளத்தை வெல்வதனூடாக மக்களுக்கான முற்போக்குப் பாதையில் அவர்களை இட்டுச்செல்ல முடியுமென் நம்புகிறது. எனவே அத்தகைய மக்களின் உணர்வுத்தளத்தை இலக்காகக் கொண்டு உழைக்கும் மக்களுக்காக உழைப்பவர்கள் தமது திட்டங்களை எடுத்துச் செல்ல வேண்டியுது அவசியமாகும்.

சமூகத்தின் அடிநிலை மக்களுக்காக முழு மனதோடும் தூய எண்ணங்களோடும் சேவையாற்ற முனைந்தவர்கள் கடந்த காலங்களில் கண்ட தோல்விகளுக்கு சரியான ஊடகங்களை அடையாளங் கண்டு கொள்ளாமையும் ஒன்று. இங்கு ஊடகம் என்பது அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமல்ல, கலை கலாசார நிகழ்வுகள், நாடகங்கள், பட்டி மன்றங்கள், வீதி நாடகங்கள் போன்ற கள ஆற்றுகைகளும் மக்களிடம் கருத்துப்பகிர்வதற்கான ஊடகங்களே. இவ்வாறான முயற்சிகளின் போது அறியாமையில் உழமும் உழைக்கும் மக்களுக்காக கறைபடியா கரங்களுடன் சேவையாற்றுவோர்க்கு சேற்றை அள்ளி வீசுவது சமூகவிரோத வேடதாரிகளின் பிரதான பணியாகிவிடுகிறது. இதனை மேவி எழ வேண்டுமெனின் மக்களிடம் செல்வதற்கான சரியான, வலுவான, வழிமுறைகளை கண்டறிந்து செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.

**"வடம் அமிழ்த்தப்பட்டவர்க்காக உழைக்கும்"**

**—ஆசிரியர் குழு—.**

# மீண்டு வருதல்

பக்கங்கள் தீர
எழுதியும்
நேரம் நகர்த்தி
நடித்துக் காட்டியும்
வாய்(மை) திறந்து
பேசியும்
இன்னுமே நாம்
விடுதலை விட்டு
விலங்குக்காகவும்
விழிப்பினை விடுத்து
துக்கத்துக்காகவும்
விடியல் நீக்கி
இருளிற்காகவும்
முரசறைந்து
மோதிக் கொள்கிறோம்
மௌனமாய்
பேசிப்போகும் - நம்
எல்லோருக்குமான
இருப்பியல் பாடம்
கிடப்பில் கிடக்கிறது
வாழ்வையும் மரணத்தையும்
வாய் திறந்து
வாங்கிக் கொண்டு
விரிந்து வாழ்கிறது
பிரபஞ்சம்!
மனிதனை - 'மதத்தின்'
கடவுளாக்கி
மீண்டும் மீண்டும்
அவனையே
களமிறக்கி - மனிதப்
பிணம் தின்று
நிணம் குடித்து
ஏப்பம் விடுகிறது - நமது
நாளாந்த வாழ்வு
உலகம்
வாழ்வு விற்கும்
சந்தையாய் விகசிக்கிறது......
'ஓகோ' வென்று
விற்றுத் தீரும்
வாழ்வு வியாபாரத்தில்
.... இன்னும் பலவும்
நிலவும் கூட
பேரம் பேசப்படுகிறது
வாழ்வு விற்று
வாழ்வு வாங்கும்
இடைவெளிக்குள்
தரகர்களுக்கும் கொஞ்சம்
தள்ளப்படுகிறது!
ஏகமாய்
ஆதிபத்தியம் ஆளும்
இங்கே
மானுட சாமான்யத்துக்கு
விடுதலை என்பது
கொதிக்கும் நெற்றியிலிருந்து
நெருப்புக்கு மாற்றப்படுதல்தான்!
சமத்துவத்தின்
கனவுகளோடு
நுற்றாண்டுகளை
பொறுமைக்கு விற்று
வயிறு வளர்க்கும்
சாமான்ய மானுடம்
என்றாலும் .....
காலம் - விடுமுறையில்
இருக்கிறது
பறிமுதல் செய்து
பகிர்ந்தளிக்கும் பணியை
பாக்கியில் வைத்திருக்கிறது
மீண்டும் அது...

க.விநாயகமூர்த்தி
வெதமுல்லை

## அன்பான சடலங்களே

நீங்கள்தான் ஒரு காலத்தில் எனது தாயகத்தின்
நம்பிக்கையாக விளங்கினீர்கள்,
சிதைவுறும் உங்கள் எலும்புகளின் துகள்களை

என் நெற்றியில் இடுங்கள்!

உங்கள் குளிர்ந்த கரங்களால்
எனது இதயத்தை தொடுங்கள்!
எனது காதுகளில் ஏங்கி அரற்றுங்கள்!
எனது முனகல்கள் ஒவ்வொன்றும்
இன்னுமொரு கொடுங்கோலனின்
கண்ணீராக மாறும்

என்னைச் சூழ்ந்திருங்கள்!

உங்கள் உணர்வுகளை
எனது ஆத்மா உள்வாங்கவும்
கல்லறையின் பயங்கரத்தை எனக்களிக்கவும்
என்னைச் சுற்றித்திரியுங்கள்
இழிவான அடிமைத்தனத்தில்
ஒருவன் வாழும் போது

கண்ணீர்த் துளிகள் மட்டுமே போதா!

**தமிழில்: வீ.பா.கணேசன்**

சர்வதிகாரி பாடிஸ்டாவின் ஆட்சியை வீழ்த்த சண்டியாகோ டிகியூபாவில் இருந்து மான்கடா படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்தியதற்காக அன்றைய கொடுங்கோலாட்சி தொடுத்த வழக்கில் இன்றைய கியூபா ஜனாதிபதி "பிடல்காஸ்ட்ரோ" அன்று ஒரு கைதியாக நின்று தனக்காக தானே வாதாடியபோது ஆற்றிய (உலக புகழ்பெற்ற) "வரலாறு என்னை விடுதலை செய்யும்" எனும் உரையிலிருந்து மிகச்சிறிய பகுதி இவ்வுரை 1956 செப்டெம்பர் மாதம் நிகழ்த்தப்பட்டது.

# சிலை

சிலைக்குப் பின்னால் சிக்கித்தவிக்கின்றது
எங்கள் ஊர்
முருகன் கோவிலும்
அம்மன் கோவிலும்
கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்பதால்
கோடியில் அரைவாசி கொட்டி
கோபுரங்களாய் முட்டி நிற்கின்றன.
அம்மன் சிலை பனிய டிவிசனிலும்.....
முருகன் சிலை மேல் டிவிசனிலும்

சிவராசண்ணனின் வெட்டுண்ட
மேனிக்கு பின்னால்
சிலைகள் காரணமாகியுள்ளதை
சிலர்தான் அறிவர்
சிலை இன்னும் சிலையாகத்தான் - அது
அசைவதாய் தெரியவில்லை
ரெண்டு பட்ட எங்கள் ஊர்
ஒன்றுபட்டதாய் ஒரு
கதையுமில்லை

சிலையை பார்க்கும் போதெல்லாம்
சிற்பியின் கை வண்ணமும்
நிறங்களின் மை வண்ணமும் தான்
தெரிகிறதே தவிர
'தெய்வீகம்' அதில்
தெரிந்ததேயில்லை
ஒற்றுமையின் சின்னமாய் அது
இருந்ததேயில்லை

ஒரு உண்மைமட்டும்
உதிர்ந்தது எனக்கு
சிலை சிலையாகத்தான் இருக்கும்



செம்மலர் மோகன்
இராகலை

# வரலாற்றில்

**1913ம்** ஆண்டு கீதாஞ்சலி கவிதை நூலிற்காக நோபல் பரிசு பெற்ற ரவீந்திர தாகூருக்கு ஆறுவருடங்கள் கழிந்து 1919ம் ஆண்டு மதுரை டவுன் ஹோலில் தாகூருக்கு பாராட்டு விழா நடாத்தினார்கள்.

எண்பது ஆண்டுகள் வாழ்ந்தவர் தாகூர் அதிலே பாதி வாழ்க்கைதான் வாழ்ந்தவர் பாரதி. பாரதி, தாகூருக்கு இருபதாண்டுகள் பின்னாலேயே பிறந்து இருபதாண்டுகள் முன்னாலேயே இறந்துவிட்டான். தாகூருக்கு வறுமை என்பதே தெரியாது. பாரதி வளமை என்பதையே அனுபவிக்காதவன். அந்த தாகூரின் கவிதைகளை தமிழனுக்கு அறிமுகப்படுத்தியவன் பாரதி. 'கவீந்திரனாகிய ரவீந்திரன்' என்று தாகூரைப் புகழ்ந்தான். அவன் மகாகவி தாகூருக்கோ பாரதி எனும் நபரேயே தெரியாது.

1919ல் நடந்த கௌரவிப்பின் போது தாகூரை தமிழனுக்கு அறிமுகப்படுத்திய பெரும் புலவன் ஒருவன் மதுரைக்கு அருகில் இருக்கிறான் எனும் செய்தியை சொல்லக்கூட அங்கொரு 'தமிழன்' இருக்கவில்லை. இன்று நாம் பாரதியைப் பாராட்டுகிறோம். பாராட்டுவதற்குண்டான பாடல்கள், எழுத்துக்கள், வசனங்கள், கவிதைகள் எல்லாவற்றையுமே 1919றக்குள்ளேயே பாரதி எழுதிமுடித்துவிட்டான். ஆனாலும் தாகூரைப் பாராட்டுவதற்குத் தயாராக இருந்த தமிழகம், பாரதியை அறிந்து கொள்ளக் கூட, இனங்கண்டு கொள்வதற்கு கூட தயாராக இருக்கவில்லை.

பாரதிக்கு பதினொரு வயதில் 'பாரதி' பட்டம் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு அவன் உயிரோடு வாழ்ந்த காலங்களில் அவனுக்கு எந்தப் பரிசும், எந்தப் பட்டமும், எந்த விருதும் யாராலும் கொடுக்கப்படவில்லை.

**நன்றி தாமரை - ஜன 2002**

தனது பார்வையை வாசகருடன் பகிர முனையும் படைப்பாளி அதை வாசகர் மீது திணிப்பது இலக்கியமாகாது. ஆயினும் தனதுபார்வை என்ற தெளிவு படைப்பாளியின் மனதில் உள்ள அளவுக்கு படைப்பிலும் புலனாக வேண்டும்.

# இன்னுமொரு சிலுவை



கொஞ்சம் இறக்கிவிடச்
சொல்லுங்கள்.
இன்னுமேன் அவன்
சிலுவையில்.....?
பாவத்தை நாம் செய்தோம்
தண்டணையை அவனுக்குக்
கொடுத்திருக்கிறோம்.

மனிதர்களே!
வணங்கும் போது கூட
அவனுக்கு வசதி செய்யவில்லையே.
ஆலயம் செய்தோம்
ஆண்டவனை வணங்கினோம்
சிலையிலும் அவனுக்கு
சிலுவை செய்தோம்
நித்தமும் நித்தமும்
முழந்தாளிட்டு அழுகிறோம்.

அன்பு செய்தவன்,
அறம் சொன்னவன்
தன்னலம் மறந்தவன்
மண்ணலம் எண்ணியவன்
மரித்தபின்னும் தண்டனை பெறுவான்
என்பதற்கு சான்றா இது?
என்ன...
தயார் செய்துவிட்டீர்களா?
இதைச் சொன்னதற்காய்
எனக்கொரு சிலுவை?

- பாஸ்கி -

மனித குலத்தின் நலனைக் கருத்திற் கொண்டு மனித இன மேம்பாட்டுக்காக குரல் கொடுக்கும் சகல படைப்பிலக்கிய வாதிகளுடனும் ஐக்கியத்துக்கான தேவை உள்ளது.

# பல சிலைகள் சிலசிற்பிகள்

சிற்பிகளே!
நீங்கள் எங்களை
செதுக்கியது போதும்
செதுக்கல் என்பது
கழித்தலல்லவா!

சிறுக சிறுக எங்களை
சிறுப்பித்து விட்டீர்கள்
உங்கள் உளிகளால்
எங்கள் விழிகளை
குத்தி விட்டீர்கள்

நீங்கள் சிற்பியாக
வேண்டும் என்பதற்காய்,
நாங்கள் இனிமேலும்
பாறைகளாக முடியாது

நீங்கள் கலைகள்
படைக்க வேண்டும்,
என்பதற்காய் இனிமேலும்
பலிகளை அனுமதிக்க முடியாது

கல்யுகம் என்றோ கடந்தாயிற்று
இரும்பு யுக விலங்குகள்
இன்னும் எங்கள் கைகளில்!

உங்கள் உளிகளுக்கு
எங்கள் உயிர்களை
காக்கும் பலம் இருந்தால்
செதுக்குங்கள் சிலைகளை

எங்கள் துகல்கள்
மண் மேடுகளாகின்றன
நீங்கள் உணர வேண்டாம்
உங்கள் புதைகுழிகளுக்கான
மண்ணை நீங்கிளே
தயாரித்துக் கொள்கிறீர்கள்
எனும் உண்மையை

...மைபா...

# என் நான் மறந்தவனுக்கு

இன்னும்
கடினமான மனதுடன்
கண்ணீருடன்
இருக்கிறாயா...!

தனித்து
விடப்பட்டது போல்
நீ உன்னுள் வரண்ட
நம்பிக்கையுடன்
அன்பற்ற தேசத்தில்
நேசிக்க மனமற்று
போனதாய்
நினைக்கிறாய்
என்று எனக்குத்தெரியும்!

பாடபுத்தகங்களும்
விரிவுரைகளுக்கும் இன்றும்
பல்கலைக்கழகம் தருகின்ற
நினைவுகளும்
மூழ்க முடியாதவளாக
கண்ணீருடன் அழவா
செய்கிறாய்...?

என்ன செய்வது
கண்ணீரை துடைக்க
முடியாதபடிக்கு
என் கைகள்
கட்டப்பட்டிருக்கின்றன

வீட்டின்
தனிமைச் சிறையில்
என் ஆயுள் கழிகின்றது
அதன் வன்முறைகளுடன்!
உனக்காவது ஒரு
விடுதலைக்கான
வெளி
இருக்கின்றது...
நானோ அறைகளின்
வெப்ப தகிப்பில்
ஒற்றை கனவுகளுடன்
சாகின்றேன்



-சங்கமித்தா-

## காலத் துரோகி

நாளை நாளை என
தள்ளிப் போட்ட சந்தோஷங்கள்
கைகொட்டி நர்த்தனிக்க
இமைகள் சுயம் மறக்கும் - சிலகனம் ஓடும்
கால நதியில்
எந்தத் துளி என் வாழ்க்கை?
சேர்ந்தோடத் தெரியாமல்
நனவுக் கரை நின்று
முகம் திருப்பி
கனவோடை நீந்தி
கற்பனை உலாப் போக,
ஓடும் கூட்டத்தில்
நிற்க முயன்றவன் பாடாய்
நிதர்சனம் அலற
சமூகக் கைதியாய்
யதார்த்தம் தள்ளிச் செல்லும்
நாளைய கனவுகள்
நேற்று முடிந்ததாய்
மீண்டும் தொடர
நத்தை வேக நடை பாதையில்
குறுக்கிட்ட பட்ட மரம்
முடிந்து போன தசாப்தங்களையும்
நரைத்துப் போன கனவுகளையும்
நினைவுறுத்தும்

ஆ. புனிதகலா
வட்டவளை

யாருக்காகப் படைக்கிறோம் என்ற தெளிவும் எதற்காகப் படைக்கின்றோம் என்பது பற்றிய நிச்சயமும் எதையும் புத்தித் தெளிவுடன் நோக்கி உண்மைக்கும் பொய்க்கும் வேறுபாடு காணும் நல்ல மதியும் புரட்சிகரப் படைப்பாளிகளுக்கு அவசியமானவை.

‘அகசலனம்’ நவீனக் கவிதைக் களம்
151, பிரதானவீதி, பொகவந்தலாவை.

மலையகத்தில் காத்திரமான இலக்கியச் சூழலை உருவாக்கும் முயற்சிகள் வலு வேகமாக வளர்ந்துவருகின்றன. அவ்வகையில் பொகவந்தலாவ மாரி மகேந்திரன், பொன்பிரபாகரன், பிரேம் போன்றோரின் முயற்சியில் வெளிவரும் அகசலனம் கவிதைக்கான காலாண்டிதழ் மலையகக் கவிதைத்தளத்தில் ஒரு புதிய திசை மாற்றத்தை வேண்டி வெளிவருகின்றது. சுமார் 19 கவிதைகளையும், நவீன தமிழ் கவிதை பற்றிய கட்டுரை ஒன்றையும் உள்ளடக்கி 30 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

சினிமாத் துறை தொடர்பாக தேடல்களை செய்து கொண்டிருக்கும் மாரி மகேந்திரனின் ஆளுமை அகசலனத்தில் வெளிப்பட்டிருக்கின்றது. மாக்ஸிய தளத்தில் நின்று மக்களுக்கான கவிதைகளை அடையாளம் காட்டி வெளிவந்திருக்கும் இவ்விதழின் தொடர் வருகையால் ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கான இடம் நோக்கிய பயணத்திற்காக இயங்கும் நோக்கை எய்த முடியும் உலக பிரபல்ய எழுத்தாளர்கள், புரட்சியாளர் சிலரது கவிதைகளையும் தன்னகத்தே கொண்டிப்பது இதழின் காத்திரத்தை இறுக்கப்படுத்த முனையினும் குறித்த தளத்திலிருந்து மாறுபடாத ஒன்றுக்கொண்டு வேறுபாடதிகமில்லை கவிதா பாணி சற்று சலிப்பூட்டாமலும் இல்லை.

புதியதொரு இலக்கிய அறிமுகத்தை நிலை நிறுத்த முனையும் அகச்சலனத்தின் ஆரோக்கிய சிந்தனைகளை ‘வடம்’ வாழ்த்துகிறது.

தொடர்புகட்கு
மாரிமகேந்திரன்
அகசலனம்

குழந்தைகளின் வயது, மூளை வளர்ச்சி, மொழித்திறன், ஆற்றல், ஏற்புடைமை, எளிமை, கற்பனை என்பவற்றையும் மனங்கொண்ட பின்னரே குழந்தை இலக்கியம் படைக்க முயல வேண்டும்.

# போர் வீரன்

எனது போர்க்குணம்
முரசறைகிறது
மேட்டுமைத் தனங்களை
தோலுரித்துக்காட்ட
கங்கணம் கட்டிக்கொண்டு
கட்டியம் கூறுகிறது.

காட்டாற்று வெள்ளம்
கரை புரண்டோடிய போதினும்
களைத்து விடுவேனா நான்?

அகங்காரம் எனக்குள் என்று
அடித்துக் கூறிய பேர்வழிகள்
அடிப்பட்டு போன போது
என் போர்க் குணத்தை மெச்சிப்
பேசினார்கள்
இருட்டில் அறுத்தப்போட்டாலும்
என் உடல்
இறுதி நிமிடத்திலும்
ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக்
கூக்குரலிடும்

வரட்டுத்தத்துவம் பேசும்
வரண்ட இதயம் கொண்டவன்
அல்லன்.
ஈரம் கசியும் இதயத்துடன்
என் மக்கள் சார்பு போர்வீரன்

இவன் எந்த புயல்காற்றையும்
காட்டாற்றையும்
கட்டுடைந்த வெள்ளத்தையும்
எதிர் கொண்டு
வெல்லுவானன்றோ!

-மைலாடியூர் கிட்டு-

# கவிஞன் பதில்கள்

☆ தலித்துக்களுக்கான எழுத்துக்களை எவ்வாறு வரையறை செய்யலாம்? அது இலங்கைச் சூழலுக்கு எந்தளவு பொருத்தமுடையது?

ீ.ராகினி - வத்தளை

தலித்துக்கான எழுத்து என்பதைக் கொஞ்சம் விரித்துப் பார்த்தால், வர்க்க அடிப்படையிலான எழுத்து, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கான எழுத்து என்பவற்றையும் நாம் காணலாம். ஒரு குறிப்பிட்ட சமூக அடையாளத்தையொட்டி எவரும் ஒடுக்கப்படும்போது அதற்கான எதிர்வினை அந்த அடையாளஞ் சார்ந்தே எழும். ஒருவர் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் என்பதனால் மட்டும் அவர் ஒடுக்குமுறையை எதிர்த்து நிற்க அவசியமில்லை. மறுபுறம், அச்சமூகத்தைச் சாராத ஒருவர் அந்த ஒடுக்குமுறை பற்றிய ஆழமான கரிசனையுடன் இருக்கலாம். எனினும் சமூக உணர்வும் விழிப்புணர்ச்சியுமுடைய ஒடுக்கப்பட்ட சமூகத்தவரின் அனுபவங்களும் விடுதலை உணர்வும் எழுத்தில் இணையும் போது, அதற்கு ஈடாக வேறெவராலும் எழுத முடியுமா?

எந்த ஒடுக்கப்பட்ட சமூகத்தினதும் உரிமைக்காவும் விடுதலைப் போராட்டத்திற்காகவும் நிபந்தனையற்ற ஆதரவு தரும் எந்த எழுத்தும் அந்தச் சமூகத்துக்கான எழுத்துத்தான். அது இந்தச் சமூகத்தின் எழுத்தாக மாறுவதனால், படைப்பாளி அச்சமூகத்தின் பல்வேறு போராட்டங்களுடன் தன்னை நெருக்கமாகப் பிணைத்துக் கொள்ள வேண்டும்.

தலித்தியம் பற்றித் தமிழகம் அறிவதற்கு இருபது ஆண்டுகளுக்கும் முதலே இலங்கையில் சாதியத்திற்கெதிரான எழுத்தும் போராட்டமும் நிலை கொண்டு விட்டன. இங்கே இடதுசாரி இயக்கம் குறிப்பாக புரட்சிகர கம்யூனிஸ்ற்றுக்கள், சாதியத்திற்கெதிரான போராட்டத்தின் முன் வரிசையில் தம்மை நிறுத்திக் கொண்டனர். எனவே பிற போராட்டங்களை மறுக்கும் ஒரு தலித்தியம் பற்றிப் பேச வேண்டிய சூழல் உருவாகவில்லை.

ஒவ்வொரு ஒடுக்குமுறைக்கும் எதிராக நடக்கும் போராட்டங்களும் ஒன்றையொன்று ஆதரிக்கின்றன. தமிழகத் தலித்தியவாதிகள் அவற்றைத் தனிமைப்படுத்திப் பிரித்துப் பலவீனப்படுத்தியுள்ளனர். இங்கு அதற்கு எதிர் மாறாகவே நடந்துள்ளது. எனினும் சாதியத்தை முறியடிப்பது ஒரு இடையராத போராட்டத்தால் மட்டுமே இயலும்.

☆ வாசகர் மட்டம் குறைந்து செல்லும் நிலையில் 'எழுத்துக்களில் அரசியல்' என்பது கடுமையான வேலைதானே?

A. புனிதகலா-வட்டவளை

வாசகர்களின் மட்டம் குறைவதே ஒரு அரசியல் பிரச்சினை தானே. அது திட்டமிட்டே குறைக்கப்படுகின்றது. 'சக்தி' தொலைக் காட்சி ஏன் மலையகத்திலும் வடக்கு கிழக்கிலும் மட்டரகமான ரசனையை வளர்க்கின்றது? நமது ஏடுகள் ஏன் சினிமாக் கலாச்சாரத்துக்குத்

தீனிபோடுகின்றன? வாசகர்களின் மட்டம் இறங்கினால் நாம் அவர்களுக்கு கைகொடுத்துத் தூக்கிவிட வேண்டும். நாமும் கொஞ்சம் கீழே இறங்கி வராமல் மற்றவர்கள் மேலே உயர உதவ முடியாது. எனவே, தரத்துக்கான போராட்டமும் அரசியல் வேலையும் முதலில் பல்வேறு தளங்களிலும் உள்ள மக்களை எட்டவேண்டும். மக்கள் இலக்கியம் என்பது கடுமையான வேலை, சமூகப் பயனுள்ள வேலைகள் எல்லாமே கடுமையானவை தான்.

☆ எம்நாட்டின் மூத்த எழுத்தாளர் எஸ்.போ. பொத்தம் பொதுவாக எல்லோரையும் குறைகூறிக் கொண்டிருக்கின்றாரே?

**R.பன்னீர் செல்வம் - நாவலபிட்டி**

தாழ்வு மனப்பான்மையே பல சமயங்களின் மிகையான தற்புகழ்ச்சிக்கும் மற்றவர்கள் மீதான காய்ச்சலுக்குங் காரணமாக உள்ளது. எஸ்.பொ. எழுப்புகிற ஓசை அவர் ஒரு வெறுங்குடம் என்றே எண்ணத் தூண்டுகிறது.

☆ அண்மையில் மறைந்த சுந்தர ராமசாமியின் கவிதைப்பற்றி...

**M. கமலதர்ஷினி - கெலிவத்தை**

சுந்தர ராமசாமியை ஒருமுறை தான் சந்தித்திருக்கின்றேன். பழக இனிய பண்பான மனிதர். புனைக்கதையாசிரியர் என்ற வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஆக்கங்களைத் தந்திருக்கிறார். எனினும் கவிதைப பற்றி அவரது புரிதல் குழறுபடியானது. அவர் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுள்ள கவிஞர் என்று நான் என்றுமே நினைத்ததில்லை. அவருக்கு அவரது கவிதையின் பலவீனம் தெரியும் அளவுக்கு அவரது அபிமானிகளுக்குத் தெரியாது.

☆ எழுத்துகளில் வேதனைக்குரல் எந்தப் புள்ளியில் ஆபாசத்தை தொடுகிறது.

**S.நடராஜா - டிரேட்டன்**

ஆபாசம் என்பதற்கு தனிமனித உணர்வு சார்ந்த ஒரு பரிமாணமும் அதற்கப்பால் ஒரு சமூக பரிமாணமும் உண்டு. நேற்றைய ஆபாசமும் இன்றைய வழமையாகலாம். இன்றைய வழமை நாளைய ஆபாசமாகலாம்.

ஆபாசம் பற்றிய குறிப்பான மதிப்பீடுகள் காலத்துடனும், இடத்துடனும் சூழலுடனும் வேறுபடுகின்றன. அதனால் அதை முற்றிலும் தனி மனிதரது அகச்சார்பான அளவு கோல்கள் கொண்டு விரும்பியபடி மதிப்பிடமுடியுமா?

இது ஒரு படைப்பாளி நேர்மையாகத் தன்னைத் தானே கேட்கவேண்டிய கேள்வியுமாகும்.

வாசிப்பவருக்கு அருவருப்பூட்டும் விதமாகவோ வாசிப்பவர் மனதில் மனித உறவுகள் பற்றிக் கீழ்த்தரமான எண்ணங்கள் விளையும் விதமாகவோ எழுதுவது என்னளவில் ஆபாசமானது. எப்போதோ அடூர் கோபாலகிருஷ்ணனின் 'விதேயன்' மலையாளப் படம் பார்த்தேன் கொடுமையான வன்முறையும் பாலுறவும் அந்தப் படத்திற் கூறப்பட்டிருந்தன. ஆனால் ஆபாசமானது என்று யாருமே ஒரு சொல் குற்றங் கூற முடியாத விதமாகக் காட்டியிருந்தார். எங்களுடைய மன

அவலங்களை அப்படியே எல்லார் மீதும் திணிக்க எங்களுக்கு என்ன உரிமை உண்டு என்று யோசித்தால் நம் எழுத்தில் நிதானம் பிறக்கும். நம் முன்னுள்ள கேள்வி ஒன்றை எழுதக்கூடாது என்பதல்ல, எப்படி அதை எழுதுவது என்பதுதான்.

☆ நோக்கமின்றிய படைப்புக்கள் என்ற ஒன்று உள்ளதா?

**A. லெட்சுமணன் - இம்புல்பிட்டி**

நோக்கமில்லாத வாழ்க்கை ஒன்று இருந்தால் நோக்கமில்லாத ஒரு எழுத்தும் இருக்கும். தாகமும், பசியும் சுவாசமும், தூக்கமும் நோக்கமற்று நிகழலாம். பேச்சு நோக்கமற்றதல்வே. எழுத்து அதைவிட அதிக முயற்சியை வேண்டுவதல்லவா. அமைதியான பயனுள்ள நோக்கம் ஒருவருக்கு இல்லாமலிருக்கலாம். நோக்கம் தெளிவீனமாக இருக்கலாம் இல்லாமலிருப்பது கடினம்.

☆ தன் படைப்புக்களுக்கு எழும் விமர்சனங்களை எதிர்கொள்ள தயங்குவோர் பற்றி

**M. கமலதர்ஷினி - கெலிவத்த**

முன்வைக்கப்படும் எல்லா விமர்சனங்கட்கும் ஒருவர் பதில் கூற முடியாது. தேவையும் இல்லை. ஒரு விமர்சனத்தின் பெறுமதியும் அதில்உள்ள உண்மையுமே அதை முகங்கொடுக்கத்தக்கதாகப்படுகின்றது. நியாயமான விமர்சனங்களிலிருந்து ஒருவர் எப்போதும் நழுவ இயலாது. பொது வாழ்க்கை என்று வந்து விட்டால் அது இயலாத காரியம். அதே வேளை நேர்மையற்ற கருத்துக்களுக்கு மறுமொழி சொல்வது அவற்றைக் கௌரவிப்பதாகும். இங்கே ஒருவர் 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப நடந்து கொள்வது தகும்.

---

நவீன இலக்கியங்களில் முனைப்பான அம்சங்களில் ஒன்று புதுமையை மாற்றத்தை பிரக்ஞை பூர்வமாக மேற்கொண்டுள்ளதாகும்.

# வெளவால் ராஜ்யம்

ஒருவன் 'திருடன்' என்றான்
மற்றவன் 'ராஸ்கல்' என்றான்
குமரிகள் தம் கற்பைக்
குடித்தவன் என்றும்
குடிகள் தம் பொருளை
தின்றவன் என்றும்.....
உலகத்தின் வீடுசெல்லும்
ஊடகம் தனிலேறி
முழங்கினார், முழங்கினார்.

ஆகா!
ஜனங்களின் நாயகர் தம்
ஜனங்களின் ஆடைகளைத்து
அரங்கேற்றினர்...
எதிர்பார்த்த எதிரியற்ற
உதிரிகளின் வீடுகளில்
கும்மாளம் கரகோசம்
ஏளனம் இகழ்ச்சி
ஆனந்தம், ஆனந்தம்
உண்ணா திருந்த போதும்
உண்டென்று மறைந்திருந்த
தன்மானம் பறந்தது விண்ணோடு
இருகைகள் கொண்டு
எதனைப் போர்த்துவார் இவர்?

திருட்டு, கொள்ளை
வல்லுறவு, நல்லுறவு பற்றி
ஆளுமையும் சாணக்கியமும்
தொடர்ந்தும் ஓலமிட்டன.

அரங்கு செய்து அனுப்பி வைத்த
குடிகள் குறுகினர்.
உயிரும் உணர்வும் சிறுக சிறுக
சபித்தபடி தலை கவிழ்ந்தனர்.
இருகுழுங்களின் வாய்களிலும்
என்றோ பருகிய விருந்துகள்
மலச்சேறுகளாய் வழிந்தன.
வாழ்க!
வாக்குரிமை!

சை.கிங்ஸ்லி கோமஸ்

தனியார் தொலைக்காட்சியொன்றின் அரசியல் விவாதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது.

**நம்பிக்கை**

கால முதிர் கருவை,
காற்றுவந்து சிதைக்கும்
கலையும் கருமுகில்
கனவுடைக்கும்
தொடரும் பிரயத்தனங்களில்
மண்மீது பொழியும்
நம்பிக்கை நமக்குள்.
பகைவர்களின் வலிமை - நம்
வாய் கட்டிப் போடலாம்
மௌனங்களை விழுங்கு
ஒரு நாள்
திடீர் எரிமலையாய்
எழலாம்.

**எஸ்தர் லோகநாதன்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

---

கதை என் பிதா
கவிதை என் மாதா
கட்டுரை என் காதலன்
இலக்கியம் என் குடும்பம்

**R.K. புஸ்பா தேவி**
**இறக்குவானை**


---

**போர் வளர்த்த தோட்டம்**

அடிவாரமடைய
தியாகமல்லவா செய்யவேண்டும்
வேலிக்கு வெளியில் நின்று
வெட்டுகிறோம் தாவித் தாவி
விருட்சம் விரிகிறது.
கிளை வெட்டப்பட்டால்
கிளைகள் முளைக்கும்

**- கடிகாரன் -**

# காத்து இருப்பு



முழுதாய் மூடப்படாத
இமைகளின் கீற்று இடைவெளியில்
குறுமயிர்கள் மறைத்த
தெளிவற்ற காட்சியில்
உன் வதனத்தின் ரூபம்-எனது
மரண கணங்களில்
புன்னகைப்பதாய் உணர்கிறேன்.

திரேகம் கெட்டுலர்ந்து
சரிந்த நிமிடங்களின்
கடைக்கோடியில்
பார்த்துச் செல்ல வந்திருக்கிறாய்

கொடுக்க மறுத்து, அடம்பிடிக்கும்
நாணயத்தைப் போர்த்திய
பிச்சைக்காரச் சிறுமியின்
உள்ளங்கையாய், விரல்களாய்.....
இறுதிவரை திரட்டிச் சேர்த்த
எல்லா வலிமைகளுடனும்
இருக்கிறது இதயம்
அதற்குள் நம் நினைவுகளும், திட்டங்களும்

- ஆதிபகவன் -

'வடம்' காலம் தாழ்த்தி வெளியிடுகின்றமைக்காக தனது மன வருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றது. படைப்பாளிகளும், பொருளாதாரமும் எம்மோடு இணைந்துவர அடம்பிடிக்கின்றன(ர்) அன்பான இலக்கிய நெஞ்சங்களே எங்களோடு ஒத்துழைப்பது நீங்கள் செய்யும் நற்பணியல்லவா.

ஆ.ர்.

# நேர்காணல்

**வே.தினகரன்**



**சு. முரளிதரன்**

மலையகத்தின் முக்கிய கல்வியலாளர்களில் ஒருவர் சமவெளி மலைகள், தியாக எந்திரங்கள், தீவகத்து ஊமைகள், கூடைக்குள் தேசம் போன்ற கவிதைத் தொகுதிகளைத் தந்தவர்.

மலையக இலக்கியத்தளங்கள், வளமும் வாழ்வும் போன்ற கட்டுரைத் தொகுதிகளின் ஆசிரியர்.

கூடைக்குள் தேசம் எனும் கவிதைத் தொகுதியினூடாக ஈழத்துத் தமிழ்க் இலக்கிய பரப்பினுக்கு ஹைக்கூ வடிவ கவிதைகளை அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

**(1) உங்களின் இலக்கிய பிரவேசம் எப்படி ஏற்பட்டது?**

முறையான பாடசாலை படிப்பை பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில் தென்னிந்தியாவில் வளர்ந்து பின் இலங்கை வந்து கடை ஊழியராக வாழ்க்கைத் தொடங்கி சிறு வணிகராக பரிணமித்த என் தந்தை புத்திரர்களை பிரசித்த நகர் பாடசாலைக்கு அனுப்பி விடுதியில் வைத்து கற்பிக்கும் அளவுக்கு கல்வியின் வலிமையை உணர்ந்தவர். ஆனால் பொருளாதார முடக்கம் காரணமாக ஆறாவதான எனக்கு பெருந்தோட்ட பாடசாலையில் கற்கும் வாய்ப்பே கிட்டியது. என்றாலும் மூத்தவர்கள் கல்லூரிகளில் நின்று கொணரும் அரிய நூல்களை வாசிப்பதன் மூலம் மூன்றாம் வகுப்பிலேயே பாட நூல்களுக்கு அப்பால் உள்ள பரந்த உலகைச் தரிசிக்கக் கூடியதாக இருந்தது. விளையாட்டு துறையில் ஈடுபாடின்மையும், வீட்டுக்குள் வேறு பொழுதுபோக்குகள் இன்மையாலும் வாசித்தது போலவே படைக்க வேண்டுமென்ற உந்தல் ஐந்தாம் வகுப்பிலேயே என்னை வதைத்தது. அதிஷ்டவசமாக இடைநிலை வகுப்புகளில் எனக்கு ஆசிரியர்களாக கிடைத்தவர்கள் என் திறமையை இனங்கண்டனர். குறிப்பாக செ.யோகராசா (தற்போது கிழக்குப் பல்கழைக்கழக மொழித்துறை தலைவர்) ஆசிரியராக மட்டுமல்லாமல் படைப்புலகம் பற்றிய பரிமாணத்தை தெளிவுருத்தினார். இதன் விளைவாக பாடசாலையின் இளந்தளிர்கள், கையெழுத்துப்பிரதிக்கு ஆசிரியராகவும் பக்கங்களை படைப்புகளால் நிரப்புபவராகவும் செயற்பட்டேன். அது அன்றைய தினபதி பத்திரிகையில் அறிமுகப்படுத்தப்பட்டு ஊக்குதலைத்

தந்தது. விளைவு பத்தாம் வகுப்பிலேயே மல்லிகைக்கு எழுதி கவிதைகள் வெளிவந்து தன்னம்பிக்கையை விளைத்தது. பின்னர் அந்தனி ஜீவா அகளங்கன், சாரல் நாடன் போன்றோரின் நேசமும் அரவணைப்பும் தீவிர இலக்கிய செயற்பாட்டிற்கு இட்டுச் சென்றது. அதன் விளைவாக கவிஞர் அகளங்கனோடு இணைந்து வெளியிட்ட சமவெளி மலைகள், தியாகயந்திரங்கள், கூடைக்குள் தேசம், தீவகத்து உமைகள் ஆகிய கவிதைத் தொகுதிகளும் மலையக இலக்கிய தளங்கள் மற்றும் வளமும் வாழ்வும் கட்டுரைத்தொகுப்புகளும் கவனிப்புக்குரிய மலையக வரவாக அமையப் பெற்றன.

**(2) இலங்கைக்கு 'கூடைக்குள் தேசம்' எனும் தொகுதியூடாக ஹைக்கூ வடிவக் கவிதைகளை அறிமுகம் செய்தீர்கள். அதுபற்றி.....**

தியாகயந்திரங்கள் மலையகத்தின் பேசப்படக்கூடிய முதலாவது புதுக்கவிதைத் தொகுதியென எண்பதுகளின் முற்றில் கணிக்கப்பட்டது. இதனால் என்மீது கவனம் புரிந்த மலையகத்தின் அறுபதுகளில் பிரகாசித்த எழுத்தாளர்களும் தலைநகர எழுத்தாளர்களும் குறிப்பாக மேமன்கவி, அல்-அசோமத் போன்றவர்களும் மலையகக் கவிதைகளுக்கான புதிய முயற்சிகளை முன்னெடுக்க வற்புறுத்தினார்கள். எனது தேடல்களின் போது தமிழகத்தில் அப்போதே அறிமுகமாகி பிரபல்யமாகிக் கொண்ட ஹைக்கூ கவிதைகள் தென்பட்டன. அதனை தத்துவார்த்தமாக உள்வாங்கி பிரயத்தனமெடுத்து மலையத எண்ணக்கருக்களை மையமாகக் கொண்டு இலங்கையில் முதலாவது ஹைக்கூ கவிதைத் தொகுதி அந்தனி ஜீவாவில் கொளுந்து விட்டெரிந்த வெளியீட்டு முயற்சிக்கு தோல் கொடுப்பதாக வெளிவந்தது. அது அடக்கிவாசிக்கப்பட்ட பரிசோதனை என்றாலும் அக்கால சூல்நிலையிலும் ஏன் இப்போதும் கூட விளைவுகள் வீரியமானவையாக இருக்கின்றன. குறிப்பாக அப்போது மலையகத்தில் உருவாகிக் கொண்டிருந்த புதிய வரவுகளுக்கு மலையக கவிதைத் தொனிக்கான புதிய கருப்பொருட்களை கொடுத்தது. விளைவாக இக்கருப்பொருட்களையும் அதன் தொடர்ச்சியினையும் கவிதை வழியாக பலர் முன்னெடுத்தார்கள். சிலர் சில சொல் மாற்றங்களோடு அதனையே மீள ஒப்புவித்தாலும் அதனை எதிர் மறையாக நான் நோக்கவில்லை. மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன் இரண்டு இலங்கை மற்றும் தமிழ்ப்புல்கலைக்கழகங்களில் ஹைக்கூப்பற்றிய ஆய்வுகள் அனைத்திலும் (எனது பார்வைக்கு எட்டிய எட்டு நூல்கள்) இது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. எனவே கடல்கடந்த சூழ் நிலையிலும் கவிதையாக மட்டுமல்லாமல் ஒரு சமூகத்தின் பிரச்சினைக்கும் விஷரசம் வெளிச்சம் பூட்டியிருக்கின்றது என்பதில் திருப்திக் கொள்கின்றேன்.

(3) தியாகயந்திரங்களுக்குப் பிறகு தங்களின் கவிதை இயந்திரம் இயங்கவில்லையே...

தியாக் இயந்திரங்களுக்குப் பின் கூடைக்குள் தேசம் அதற்குப்பின் நீண்ட இடைவெளியில் என் உணர்வுச் சம்மதமின்றி அந்தனி ஜீவாவினால் பத்திரிகைகளில் வந்த கவிதைகள் தொகுக்கப்பட்டு தீவகத்து ஊமைகள் வெளியானது வரை எனது கவிதைக்கான இருப்பு நிலை நிறுத்தப்பட்டிருந்தது. உங்கள் வினாவின் குறி கருத்துக்கு உடன் படுகின்றேன். யந்திரம் இயங்காமைக்கு புதிய கருப்பொருள்கள் எனும் எரிபொருள் தேடுவதற்கு உழைக்கும் நேரத்தை கவிதையிலும் பார்க்க பயனானது எனச் சொல்லத்தக்க சமூகப்பன்பாடுள்ள கொள்கையாக்கல் மற்றும் நடைமுறைச் செயற்பாடுகள் என்பன தொல்லையடித்தனர். மேலும் எனது எழுத்துக்களும் பேச்சுக்களும் எப்போதும் சுய பிரலாபம் கடந்து பொதுவானதாக இருக்கவேண்டுமென்பதில் அக்கரை கொண்டிருப்பதால் அதற்கான வெளியை தீர்மானித்துக்கொள்ளும் தனித்துவமான தனிமை எனக்கு இன்றுவரை கிடைக்காமலிக்கப்பது வேதனையாகத்தான் இருக்கின்றது.


(4) மலையக இலக்கிய தளங்களை அவசர பிரசவம் என்பேன், என்ன சொல்கிறீர்கள்?

அவசர பிரசவம்! ஆமோதிக்கின்றேன். ஆனால் அவசியப்பிரவேசம் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. நூலாக்கவேண்டிய சூழலும் நிர்ப்பந்தமும் வாய்த்தது. - நிற்றல், நிதானித்தல், மறுப்பரிசீலித்தல் என காலங்கடந்தால் அதுவும் வராது போகலாம் என்ற மன உளைச்சல் அவசரமென்றாலும் ஆரோக்கியம் அதிலிருக்கின்றது. என்பதை இரு சந்தர்ப்பங்களில் உணர்கின்றேன். ஒன்று உலாத் தமிழிலக்கியத்தை அறிமுகப்படுத்தும் சிங்கப்பூர் மையமான இணைத்தளமொன்று இந்நூலில் இருகட்டுரைகளை தெரிந்து மலையக இலக்கியத்திற்கு அங்கிகாரம் வழங்கியுள்ளது.
இரண்டு நூல்களை வெளியிடும் (என்சீபீஎச்) (NCBH) நிறுவனம் இதனை மறுபதிப்பு செய்வதற்காக ஒரு பரிசீலனைக் குழுவிடம் ஒப்படைத்துள்ளது. ஆகவே, நம்மவர் பார்வை எதுவாக இருந்தாலும் பிறரின் பார்வையில் மலையக இலக்கியம் குறித்த பரந்த அனுபவத்தை பெற்றுக்கொள்ள கிடைத்த நூல் என்பது குறித்த அபிப்பிராயம் இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் மலையகங் குறித்த உந்துதல் கனமானதும் முழுமையானதுமான அறிமுகத்தைத் தருவதற்கு பொருத்தமானதுமாகவும் கொள்ளலாம்.

**(5) தாங்கள் வெளியிட்ட 'முகடு' கலையிலக்கிய இதழ் ஏன் நின்றுவிட்டது?**

முகடு மூன்று இதழ்களும் மலையகத்துக்காக மலையகப்படைப்பாளிகளிடமிருந்து வரும் படைப்புகளே பக்கத்தை ஆக்கிரமிக்க வேண்டுமென்பதை வற்புறுத்தியது. கிடைத்த ஓரிரு படைப்புகளும் ஒரு சஞ்சிகை முயற்சிக்கு வளமானதாக இல்லை.

ஆசிரியர்களின் எழுத்துக்களும் அயல் எழுத்துகளை ஒப்புவிக்க நினைத்த போது பலவீனமாக வெளிவரும் மலையக சஞ்சிகை எனும முன்னுதாரணத்திற்கு கட்டுப்படாமல் 'முகடு' வருகையை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டது. அதுவே ஆரோக்கியமானது எனவும் கருதுகின்றேன். என்றாலும் வடத்தின் வருகையும் அது தாங்கியுள்ள பண்பும் முகட்டின் முயற்சியை முன்னெடுக்கின்றது என்பதில் பூரண உடன்பாடு. 'முகடு' வெளிவரத்தூண்டிய அருத்தம் என்னிடம் என்றுமுள்ளது. தளை Tex & Teachers என்ற வடிவத்தில் தமிழும் ஆங்கிலமும் கலந்ததாக பெருந்தோட்ட கல்வி மற்றும் கலாசார அனுபவங்களை பரந்தளவில் பரப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். வெகுவிரைவில் அரையாண்டுக்கு ஒரு முறை வரும் முதல் இதழ் சர்வதேச கவனத்தை ஈர்க்குமென கருதுகின்றேன்.

# துக்கம் கலத்தல்

என் இரைப்பைக்குள்
கை விட்டு
வெகு நேரம் துழாவியதில்
கடினமான சில பிளாஸ்டிக் துண்டுகளும்
அகற்றிட முடியா சில அற்பத் தழும்புகளும்
அகப்பட்டதில்
ஆறிற்று என் மனம்!

மூன்றாவது முறையாகவும்
ஏதேதோ முணு முணுத்தபடி
சூரியனைச் சுற்றிவிட்டு
நேரே என் உள்ளங்கால்களினூடே
'விர்' ரென்று நுழைந்த
என் நான்கு இதயவரைகளும்
அடிவயிற்றுக்குள் வந்து அணைகட்டின

வியர்த்தோடுகின்ற
அர்த்தமற்ற திசைகளில்
கைச்சாத்திட மறுத்து
காலத்தை பின்னகர்த்திட
கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தன - என்
இருத்தலுக்கான பாதங்கள்!

திரும்பிப் பார்க்கிறேன்
பரந்து விரிந்த பார்வையோடும்
கூனிக் குறுகிய புன் சிரிப்போடும்
நடைவண்டித் தள்ளப்படும்
உன் வருகையில்
வார்த்தைகளற்ற வெறுமை
உன்னை வணங்கத்தான் முனைகிறது

'புறப்படு' என்ற உன்
உற்சாகமான வார்த்தை கேட்டு
நான் எழுந்திருக்க முயற்சிக்கையில்
அங்கே - அருகருகே
நின்றிருந்தன
நமக்கான கடிகாரங்கள்!

**வெதமுல்லையூர்**
**கந்தையா கணேஷமூர்த்தி**

# விளையாட்டு

மீண்டும் சொல்கிறேன்
உறுதியாய் சொல்கிறேன்
சீண்டியே விளையாடும்
சின்னத்தனம் வேண்டாம்

நம் தேசத்தின்
அங்கங்கள்
நாறியே உக்கி
இருக்கும் வேளை
சில்லறை பரிகாசம்
இனியும் எதற்கு?

மக்கள் தம் வாழ்வு
உங்களுக்கு பகடையா
போர் என்பது
பஞ்சு மெத்தையா

தெற்கில் சிங்களக்குழந்தைகள்
வடக்கில் தமிழ்க் குழந்தைகள்

எத்தனைக்காலந்தான்
இந்நிலை?
மனித நேயம்
தர்ம ராச்சியம்
பற்றியா பேசுகிறீர்

நல்லது
கருணை அன்பு
காருண்யம்
பரிவு பாசம்
ஏன்
உங்கள் செயல்களில்
துளிர்க்க வில்லை

வாயச்சவடால்
வீரர்களே,
வாருங்கள்
களம் செல்ல
பன்னீரில் குளித்து
பால்பழம் உண்டு

நெய்யும் சர்க்கரைப்
பொங்கிலும் சூழ
களநிலவரம் இல்லை
தேசத்திற்காய் உயிர்
ஈந்தவர்கள்
உலகம் உங்களுக்கு
தெரியுமா?


தன்னுயிர் ஈந்து
மண்காத்த
மாவீரர்கள் முன்
பாவம் நீங்கள்
சுத்த துறவியர்களும்
அன்று
கொட்டு முரசு
போதும்
கோப பேச்சு போதும்
மொட்டை அடித்தால்
'முழுமை ஆகிடுமா?'
வெட்டிப் பேச்சு
வேண்டாம்
மீண்டும் சொல்லுகிறேன்
உறுதியாய்
சீண்டிடும் விளையாட்டு
இனியும் வேண்டாம்

- மொழிவரதன் -

# சமத்துவம் நோக்கி

உலக தேசங்களை
மடக்கிப் பிடித்து
முள்ளந் தண்டு முரித்து
வன்மத்தின் கோரப்பற்களால்
எங்கள்..... வளம் குடித்தபடி
அமைதி நாடகமாடுவான்

நசுங்குதலில் நிமிரும் ஆத்மங்களை
பயங்கரவாதியென நஞ்சேற்றுவான்
அகில பாசிச உருவேற்று
ஜனநாயக முகம் காட்டுவான்
மெய்யறியா தேசங்களோ
உயர்வு நீயேயென
சரணடைந்திங்கு மரணித்தபடி
இன்னும்.....
தன் வயிற்றுள் செழித்த
ஆயுதப் பயிர்களை
நிமிரும் தேசமெங்கும்
மெல்ல திணிப்பான்
பச்சாதாபமாய்.....
ஆயுத எதிர்ப்பும் செய்வான்
சிவந்து நிமிர்ந்த இறுக்கமண்களை
முதலாளிய புகையிட்டு சிதைப்பான்



எதிர்த்து நிற்கும் மானுடமண்களில்
குரூரத்தின் விஷம் தெளிப்பான்
தன் தேச ஆத்மாக்களுக்காய்
மனமிறங்கி பரிவு விரிப்பான்
வேற்று தேசமெங்கும்
பிஞ்சுகள் மூப்பென
இருப்பின் செழிப்பையும்
அள்ளிக் குடிப்பான்

இப்படித்தான் இப்படியேதான்
அகில ஆளுகை நானென்ன
கூக்குரலிடும் இவ்வாதிக்கமுகு
வென்ற மதர்ப்பில் உயரப்பறக்கும்

ஆதிக்கனே உன்
பாசறை ஆயுதம் சிதைத்து
பிணைத்தெழட்டும்
எங்கும் சமத்துவக்கரங்கள்
அன்று உன் ஆதிக்கம் சிதையும்
உலகெங்கிலும் சமத்துவம் விளையும்

- சடாயு -

வடம் மலையக கவிஞர்களுக்கு நல்ல ஒரு ஊக்கச் சக்தியாகும். படைப்புகளில் வகை வகையான ஆக்க முறைகள் ஊக்குவிக்கப்படுமானால் கவிதைகள் மேலும் எழுச்சிப்பெறும். அச்சுப்பிழைகள் நீங்களான சொற்பிழைகளும், தெளிவீனமான வாக்கிய அமைப்பும் கணிசமான அளவிற் காணப்படுகின்றன. பாடக்கூடிய விதமான சந்த வலிமையுடனும் படைப்பாளிகள் இடையிடையே எழுதுவது நல்லது.

தமிழன்பன் நல்ல அரசியல் கவிதைகளை வாசிக்கவில்லை என நினைக்கின்றேன். அரசியலோ தத்துவமோ இல்லாததால் கவிதை சிறப்படையாது.

புதுக்கவிதை - மரபின் கட்டுக்கோப்பான (சிலசமயம் இறுக்கமான) வடிவத்தை நெகிழ்த்தலாம். அல்லது புறக்கணிக்கலாம் அதனால் கிடைக்கும் சுதந்திரம் என்ன வகையானது என்ற கேள்விகளை எஸ்தர் லோகநாதன் போன்றோர் விரிவுபடுத்துவது பயனளிக்கும் மல்லிகை சி.குமாரின் நேர்காணல் நேர்த்தியாக உள்ளது.

- **பேரா.சி. சிவசேகரம்** -

---

'குயில் தோப்பு' கலை இலக்கிய ஒன்றியத்தினரின் வடம் இதழ் - 02 வாசிக்க கிடைத்தது. மனதிற்குள் ஓரே சந்தோஷம் வடம் இதழ் தொடர்ந்தும் சிறப்புடன் வெளிவர எனது வாழ்த்துக்கள்.

'வடம்' 2 இல் வெளிவந்த அவளின் இரவு சாதாரண மனிதனாய், வாழ்க்கை, பேறுகள் உனக்கு மட்டுமல்ல...... படிக்கப்படாத பக்கங்கள், தற்காலிக சிறு துயரம், மீண்டும் வராதோ? போன்ற கவிதைகள் நன்றாக இருந்தன.

அத்துடன் இதழில் எழுத்துப்பிழைகள் உள்ளன. எனவே தயவு செய்து அச்சுப்பதிப்பின் போது கவனமாக செயற்படுங்கள்.

இ.ரதிதேவி
இறக்குவானை

---

ஆசிரியர் குழு
'வடம்'

அன்புள்ளங்கொண்டவர்களே,
வணக்கம். 'வடம்' இதழ் 3 கண்டேன்; ஒவ்வொரு இதழிலும் முன்னேற்றம் தென்படுகின்றது. துவண்டு விடாமல் தொடர்ந்து 'வடம்' இலக்கிய உலகில் வலம் வர வேண்டும்.

மலையகத்தில் வாசிப்பு மிகவும் குறைந்து விட்டது. மாணவர் மத்தியில் மாத்திரமல்ல, ஆசிரியர்களையும் வாசிக்க தூண்ட வேண்டும்.

அன்புடன்
அந்தனி ஜீவா

வடம் ஆசிரியருக்கு வணக்கங்கள். உங்கள் வடம் சஞ்சிகையின் இரண்டு பிரதிகளை படித்தேன். நன்றாக இருக்கின்றது. செயற்திறன் மிகு இளைஞர்களின் சேவை இது என அறிந்து பெரு மகிழ்ச்சி அடைந்தேன். மக்கள் சார்பு இலக்கியங்களில் வளர்ச்சி பின்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் இந்தக்காலத்தில் இது போன்ற மக்கள் சார்பு கவிதைகளை வெளிக் கொணர்ந்த உங்கள் செயலுக்கு என் பாராட்டுதல்கள்.

வடம் வளரட்டும்.

-கிட்டு-

மலையகச் சூழலை பிரதானப்படுத்தி புதியத்தலைமுறையினரால் வடம் வெளியிடப்படுகிறது. சமூக அக்கறையின் வெளிப்பாடாகவே இந்த எழுத்து பிரசுர முயற்சி அமைந்துள்ளது. கல்வி அறிவும், எழுத்துமுயற்சிகளும் வாசிப்புத் தேடலும் எந்தளவு அவசியமானது என்பதை குறிப்பாக மலையகச் சூழலில் நின்று ஆசிரியர் தலையங்கம் எம்மை சிந்திக்கத் தூண்டுகிறது.

'வடம்' நம்பிக்கைத்தரும் முயற்சி

மூன்றாவது மனிதன் - இதழ் - 17

## வடம் நிகழ்வுகள்

தேசிய கலை இலக்கியப் பேரவை ராகலை கிளையின் மார்கழித்திங்கள் கலை இலக்கிய சங்கமத்தின் 'வடம்' அறிமுக விழா ராகலை த.ம.வி. பிரதான மண்டபத்தில் (24.12.2005 அன்று) இடம் பெற்றது. இந்நிகழ்வு மலையகத்தின் மூத்த விமர்சகர் P. மரியதாஸ் தலைமையில் இடம் பெற்றது.

கருத்துரைகளை பா.மகேந்திரனும், வே.தினகரன் கவிஞர் மை. பன்னீர், S. ஏகாந்த் ஆகியோர் வழங்கினர். ஏற்புரையை தினகரன் வழங்கினார்.

அன்றைய தினம் சுனாமி பேரலை தாக்கத்தின் ஒரு வருட பூர்த்தி நினைவு கூறும் வகையில் அலைவீசும் கடல் தாண்டி போவோம் எனும் தலைப்பில் கவிஞர் ராகலை பன்னீரின் தலைமையில் சிறப்புக் கவியரங்கும் இடம் பெற்றது.

# பூரண பாதுகாப்பு


டேவிட் றொபேட்ஸ்13.02.2001

உலகை அழிக்க போதுமான
குண்டுகளைக் கொண்ட
ஆயுதபாணிகளாகிக்
குண்டுகளை வீசுவதில்
உலகில் முதலாமிடம் வகிக்கும்
நாடாக இருப்பதால்
அமெரிக்கா
முழு மானிட இனத்தினதும்
பகையைத் தேடிக் கொள்கிறது.
மானிட இனம்
என்றேனும் பதிலடி தரத் துணிந்தால்
அமெரிக்காவுந்
தன் தற்காப்புக்காக
முழு உலகையும் அழிப்பதை விட
வேறு தெரிவு இராது.

**David Robert**
ஒரு அமெரிக்கக் கவிஞர்)
தமிழில் சி.சிவசேகரம்



"குயில்தோப்பு"
கலை இலக்கிய ஒன்றியம்
காவத்தை





# GNANAM IMPORTS (PVT) LTD.

NO. 79, 5th Cross Street, Colombo-11.
Telephone: 2 449544, 2 441944, 2 439334,
Fax: 2 393339, 4 715443.
E-mail: gnanam@sierra.lk sales@gnanamimports.com
Web: www.gnanamimports.com